பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 28 திங்கட்கிழமை (15.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 319

# நிலையான தீர்வுக்குப் பேச்சு நடத்த அரசாங்கம் தயாராகவே உள்ளது



## புதுடில்லியில் ஜனாதிபதி மஹிந்தா

புதுடில்லி,ஒக்ரோபர்15

இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு எனது அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு தயாராகவே உள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்துவோர் அமைதி வழியில் ஜனநாயக ரீதியான தீர்வைக் காண்பதில் உண்மையாகவே - விசுவாசத்துடன் - பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்தால் அரசாங்கம் அதற்குத் தயார்.

இராணுவத் தீர்வில் எனக்கு நம்பிக்கையில்லை. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வையே நான் விரும்புகிறேன்.

இவ்வாறு புதுடில்லியில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்த முக்கிய கருத்துக்கள் வருமாறு -

பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுவது என்பதில் எனது அரசாங்கம் தீர்மானமாகவே உள்ளது. அதே அளவுக்கு - அதற்குச் சமமான ரீதியில் - இனப்பிரச்சினைக்கு நிலைத்த - நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதில் அர்ப்பணிப்புடன் அரசு ஈடுபாடு கொண்டுள்ளது.

எனது நாட்டில் அமைதியை உண்டாக்குவதற்கு எமது பிராந்தியத்தின் அயல்நாடுகளும் நட்புநாடுகளும் எம்மைப் புரிந்து கொள்ள வேண்டும், உதவி புரியவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

இந்தியாவிடம் இருந்து இராணுவ உதவி பெற விரும்புகிறீர்களா என்று கேட்டீர்கள். எங்களுக்கு இந்தியாவின் தார்மீக ஆதரவே தேவை. அதற்கு மேலாக நாம் எதனையும் எதிர்பார்க்கவில்லை - என்றார். (அ)

## வடமராட்சியில் இன்று! பகல் நேர ஊரடங்கு இல்லை

யாழ்ப்பாணம்,ஒக்.15

வடமராட்சில் நேற்று முழுநாள் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று அதிகாலை 4.30 மணிக்கு நீக்கப்படும் என்று பலாலி பாதுகாப்புப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

மீண்டும் வழமைபோல் இரவு 7 மணிக்கு ஊரடங்கு அங்கு நடைமுறைக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று பகல்வேளை ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டபோதிலும் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

(08ஆம் பக்கம் பார்க்க)

## அரச படைகளும் விடுதலைப் புலிகளும் பெரும் சமருக்குத் தயாராகி வருகின்றன!

### அடுத்த மாதம் முக்கியமானதாக இருக்குமாம்

கொழும்பு,ஒக்.15

அரச படைகளும் விடுதலைப் புலிகளும் பெரும் சமர் ஒன்றுக்கு தம்மைத் தயார்படுத்தி வருகின்றனர் என்று பாதுகாப்புத் தகவல் தெரிவிக்கின்றன.

படை நடவடிக்கைகளுக்கான ஆயத்தங்கள், தயாரிப்புக்கள் கொழும்பிலும், வன்னியிலும் திரைமறைவில் நடைபெற்று வருவதாக 'லக்பிம' வார இதழின் பாதுகாப்பு நிலைவரக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச படையினர் நூறு வீதம் வெற்றியடைவார்கள் என்று பசில் ராஜபக்ஷ கூறியதையும் -

எதிரி எல்லாமுனைகளிலும் பெரும் தாக்குதலுக்கு தம்மைத் தயார்படுத்தி வருகையில் அதனை எதிர்கொள்ள தாம் தம்மை தயார்படுத்தி வருகிறோம் என்று விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவன் கூறியதையும் 'லக்பிம'வின் பாதுகாப்பு செய்தியாளர் குறிப்பாக சுட்டிகாட்டியுள்ளார்.

அந்த கட்டுரையின் சில முக்கிய பகுதிகள் வருமாறு:-

புலித்தேவனின் பேச்சு தனியான பேச்சு அல்ல. அது விடுதலைப் புலிகளின் முன்னைய நிலைப்பாடுகளை பிரதிபலித்துள்ளது. அதாவது, புலிகள் பலவீனமான நிலையில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்ற வளாகக் கட்டடத்துக்கு தளபாடங்கள் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ். நகரில் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்ற வளாகத்துக்கான கணனிகள் மற்றும் தளபாடங்கள் கப்பல் மூலம் நேற்று எடுத்துவரப்பட்டுள்ளன.

காங்கேசன் துறைக்கு கப்பல் மூலம் பதினொரு 'கொன்ரயினர்'களில் எடுத்துவரப்பட்ட இந்தப் பொருள்கள் யாழ். நீதிமன்றத்துக்கு நேற்றுக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன

நீதிமன்ற வளாகத்தில் அமையும் சகல நீதிமன்றங்களுக்கும் தேவையான தளபாடங்கள், கணனிகள் மற்றும் பொருள்களே எடுத்துவரப்பட்டு நீதிமன்றப் பதிவாளரிடம் கையளிக்கப்பட்டன.

நீதிமன்றத்தை இம்மாத இறுதிக்குள் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நம்பகமாகத் தெரிய வருகிறது.

உலக வங்கி வழங்கிய நூறு மில்லியன் ரூபா செலவில் இந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்பட்டது தெரிந்ததே. யாழ்.நீதிமன்றம் புதிய கட்டடத்துக்கு மாற்றப் பட்ட பின் அந்தக் கட்டடத்தில் புனர்வாழ்வு நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் -

உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதி மன்றத்தில் சரணடைந்தவர்களை அந்தப் புனர்வாழ்வு நிலையத்தில் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ-1-95)

## இலங்கை மனித உரிமை குறித்த விவகாரத்தில் பொலிஸ் அதிகாரியாக ஐ.நா. செயற்படக்கூடாது

### இந்தியாவைப் பின்பற்றி நடக்குமாறு ஆர்பருக்கு பஸில் புத்திமதி





கொழும்பு,ஒக்.15

மனித உரிமைகளுக்கான இந்தப் பிராந்தியத்தின் பொலிஸ் அதிகாரியாக ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் செயற்படக்கூடாது. இந்தியாவைப் பார்த்து அதனைப் பின்பற்றி நடக்கவேண்டும்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் அவரது இளைய சகோதரருமான பஸில் ராஜபக்ஷ இப்படி ஆர்பர் அம்மையாரிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆர்பர் அம்மையார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார். அப்போது அவருடன் கூட இருந்த பஸில் ராஜபக்ஷ இப்படி ஆர்பரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தியா ஒருபோதும் தெற்காசிய நாடுகளின் பொலீஸ்காரன் போன்று செயற்பட்டதில்லை. மாறாக இலங்கையின் பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு (08ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை கண்காணிப்பகம் தமிழ்க்கூட்டமைப்பும் வலியுறுத்து!

கொழும்பு,ஒக்.15

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல் சம்பவங்களை கண்காணிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஒன்று அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வலியுறுத்தியிருக்கிறது.

அரசினால், தமிழ் மக்கள்மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல்கள் வெளிஉலகுக்கு தெரிய வந்துவிடும் என்பதால்தான் இந்த கண்காணிப்பகத்தை இங்கு நிறுவுவதற்கு அரசுத்தரப்பு பின்னடித்து வருவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

இலங்கையில் இடம்பெற்று வருகின்ற கொலைகள், ஆள்கடத்தல்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க ஐ.நா.மனித உரிமைக் கண்காணிப்பகம் ஒன்று இலங்கையில் நிறுவப்படவேண்டியது அவசியம் என்று இலங்கை வந்திருந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் கூறியதை இலங்கை அரசு நி[illegible]ாகரித்துள்ளதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுப்பாகியுள்ளது.

இந்தக் கண்காணிப்பகத்தை இலங்கையில் நிறுவுவதற்கு ஏற்றவாறு இலங்கை அரசை இணக்கத்திற்குக் கொண்டுவரும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## 3 கடற்படையினரின் சடலங்கள் ஒப்படைப்பு

கொழும்பு,ஒக்.15

யாழ்.குடாக்கடலில் நேற்றுமுன்தினம் கடற்புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த 3 படையினரின் சடலங்களை நேற்று முற்பகல் 4.30 மணியளவில் விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் ஊடாகப் படைத் தரப்பினரிடம் கையளித்திருக்கின்றனர்.

ஓமந்தைப் பகுதியில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பிரிவினரிடம் புலிகளால் கையளிக்கப்பட்ட சடலங்கள்

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# போஸ் காகிதாதிகளின் மாபெரும் மொத்த மலிவு விற்பனை

80 P அப்பியாசக் கொப்பிகள் ரூபா 13/=
120 P அப்பியாசக் கொப்பிகள் ரூபா 19.50/=
160 P அப்பியாசக் கொப்பிகள் ரூபா 26/=
200 P அப்பியாசக் கொப்பிகள் ரூபா 32.50/=

பொலித்தீன் கவரிடப்பட்ட கொப்பிகள்
320P அப்பியாசக் கொப்பிகள் ரூபா 75/=
400P அப்பியாசக் கொப்பிகள் ரூபா 85/=

மற்றும் பாடசாலை உபகரணங்கள் மலிவு விலையில் OCT. 15-18 வரை மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இல.3, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி.53980)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவன்

செல்வன்
**சின்னத்தம்பி அனோஜிகன்**

மேலும் கல்வியில் பல சிறப்புகளைப் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரையும் வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்,
தாத்தா, அத்தை.

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.* (66930)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உதயகுமார் தயாளதேவி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**செல்வன் உ.ஜெனோசன்**

யா/தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலையில் இருந்து தரம் 5 (2007) புலமைப் பரிசில் பரீட்சையில் 171 புள்ளிகள் பெற்று பாடசாலையில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் 53ஆம் இடத்தையும் பெற்றுள்ளதை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவர் கல்வியில் உயர்வடைய நாகர்கோவில் முருகையா, பிள்ளையார், நாகதம்பிரான், ஆத்தியடிப் பிள்ளையார் அருள் புரிவார். கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் தனிப்பட்ட ஆசிரியைக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அக்கா (தர்சிகா), தம்பி (அபிராம்), அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார்.

*288, V.M றோட்,*
*பருத்தித்துறை.* (66887)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
புலமைப் பரிசில் பரீட்சை தரம் - 05 - 2007



தோற்றியோர் - 29 சித்தியடைந்தோர் - 14

சித்தியெய்திய மாணவச் செல்வங்கள்

| பெயர் | புள்ளிகள் |
|---|---|
| தேவராசா தேசிகன் | 176 |
| உதயராஜன் நிவேதா | 167 |
| அழகராசா அர்ஷானா | 163 |
| இரவிச்சந்திரன் பவன் | 162 |
| கணேசகுமார் துஸ்யந்தன் | 156 |
| முருகானந்தன் இராகுலன் | 155 |
| குமரேஸ்வரன் பிரணவன் | 154 |
| மணிவர்ணன் ஆராதனா | 154 |
| கணேசலிங்கம் யதுர்சன் | 153 |
| திருஸ்ணராஜசர்மா பிரியங்கா | 152 |
| உதயராஜன் நிருஜா | 149 |
| நவரட்ணம் ஷனுஜன் | 144 |
| விநாயகமூர்த்தி கெளவேந்தன் | 144 |
| அப்பாசாமிஐயர் சுபாசினி | 142 |

இவர்களுடன் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற

| பெயர் | புள்ளிகள் |
|---|---|
| ஞானசேகரம் தர்ஷினி | 137 |
| விக்கினேஸ்வரராசா லக்சிகா | 136 |
| செல்வநாதன் ஸ்ரீபன்ராஜ் | 133 |
| முருகேஸ்வரன் மயூரியா | 133 |
| இராசலிங்கம் மதூசனா | 115 |
| மனோகரன் அபிவர்னா | 115 |
| கனகலிங்கம் கபீசன் | 106 |
| சிவலிங்கம் சுகன்யா | 104 |

ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களது வெற்றிக்கு ஊக்கமளித்து வழிகாட்டிய அதிபர் தா.ந.பரமானந்தம் அவர்களையும் இவர்களுக்கு கல்வி புகட்டிய திருமதி சாந்தி ஆனந்தமூர்த்தி, திருமதி மதிவதனி கோபிநாத் ஆசிரியர்களையும் உளமாரப் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

**பெற்றோர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.** (சி/53939)


## புத்தகம் கட்டுநர் (Book Binders)
பணியாளரும் பயிலுநரும் தேவை

புத்தகம் கட்டுநர் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வாழும் பெண்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

மாநகரசபை எல்லைக்குள் வாழும் பெண்கள் மட்டுமே பயிலுநர்களாகத் தெரிவு செய்யப் பெறுவர்.

கல்வித் தகைமை கட்டாய தேவையாகக் கருதப் படமாட்டாது.

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.


## முன்பள்ளிக்கு சுகாதாரப் பொதி

யாழ்ப்பாணம். ஒக்.15

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வேலணைப் பிரதேசசபை சுகாதாரப் பொதி வழங்கவுள்ளது.

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட நலிவுற்ற முன்பள்ளி பாலர் பாடசாலை சிறுவர்களுக்கே சுகாதாரப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

வேலணைப் பிரதேசசபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

சுகாதார பொதி வழங்கப்படவுள்ள முன்பள்ளிப் பாடசாலைகளின் விவரம்தெரிவு செய்யப்பட்டு ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

சுகாதாரப் பொதி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேலணை, வங்களாவடி ப.நோ.கூ.சங்க மாடியில் இடம்பெறும். (95)

## கடைத் தொகுதி புனரமைப்பு

நல்லூர்.ஒக்.13

வேலணை பிரதேச சபைக்குச் சொந்தமான கடைத்தொகுதிகளைப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புனரமைப்பு வேலைகக்கென வடக்கு மாகாணசபை பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 5 லட்சம் ரூபாவை பிரதேச சபைக்கு ஒதுக்கியுள்ளது. (1-111)

## திருட்டு குறித்து ஒருவர் கைது

யாழ்ப்பாணம். ஒக்.15

ஆள்களில்லாத வேளையில் வீட்டினுள் புகுந்து சுமார் 20ஆயிரம் ரூபா பெறுமதியான நகை கள் மற்றும் 25 சேலைகள் திருடிய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மட்டுவில் தெற்குப் பகுதியில் இடம்பெற்ற திருட்டுத் தொடர்பாக வீட்டு உரிமையாளர் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து இந்த நபரை சந்தேகத்தின் பேரில் கைது செய்த பொலீஸார் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

வழக்கினை விசாரித்த நீதிவான் சந்தேக நபரை 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் செல்ல அனுமதித்தார். (1-207)

## 19 ஆவது பிறந்த நாள் நினைவு



செல்வி
**மகாலிங்கம் ஜதுஷினி**

இகத்தில் பிறந்து இனிதாய் வாழ்ந்து
இல்லக விளக்காய் ஒளியூட்டுவாய் என
எல்லோரும் நினைத்திருக்க
காலனவன் கவர்ந்திழுக்க கைலாயம்
சென்றதேனோ?
பிறந்த இந்நாளில் நினைவு கூறுகின்றோம்.

*வங்கியடி,*
*உரும்பிராய் வடக்கு.* - குடும்பத்தினர். (66946)


## இன்று (15.10.2007) முதல் 08.11.2007 வரை

**தீபாவளி மலிவு விற்பனை**
நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும் விசேட கழிவு
உடனே விஜயஞ் செய்யுங்கள்

**லைடன் புடவை நிலையம்**
இல. 410, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ்நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்
தொ.பே:-222 2381 (சி/53987)


# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் உருக்குமணி



காரைநகர் பூதனடைப்பைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் உருக்குமணி நேற்று (14.10.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளிப்புரம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், அம்பலவானர் - பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் (C.T.B) பாசமிகு மனைவியும், காலம்சென்றவர்களான தியாகராசா (வேலணை ஆசிரியர்), பரமேஸ்வரி, தவராசா (பதுளை), சிவராசா மற்றும் லோகேஸ்வரி, அழகேஸ்வரி (ஜேர்மனி), மகேஸ்வரி, வெற்றிவேல் (புத்தளம்), தம்பிராசா (வவுனியா) ஆகியோரின் தாயாரும், ஜானகி, சண்முகம் (சிற்றூர்தி நடத்துநர்), திசைவீரசிங்கம் (ஜேர்மனி), பரராஜசிங்கம் (காரைநகர்), பூமகள் (வட்டுக்கோட்டை), அஜந்தி (புத்தளம்), நவநீதரம்பை (யாழ்ப்பாணம்), வளர்மதி (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பார்வதி (சுன்னாகம்), நாகலிங்கம் (காரைநகர்) மற்றும் தம்பையா (சிங்கப்பூர்), சரஸ்வதி (காரைநகர்) ஆகியோரின் சகோதரியும், அனிஷா, திவ்வியராசன், திவ்வியகாந்தன், மகிசி, சர்மிஸ்டா, சிவபாலன் சர்வதிமணன் (சாந்தன்) - கலையரசி, அனாத்தனன், சிவந்தன், நிஷாந்தினி, நிரஞ்சலா, பிரதீபன், தயாளன் (ஜேர்மனி), கோபி, திவ்வியா (புத்தளம்), விஷ்ணுகாந்த், லவ்ராஜ், தேனுகா (வவுனியா) ஆகியோரின் பேர்த்தியும், லக்சியனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2007) திங்கட்கிழமை முற்பகல்11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

*பூதனடைப்பு,*
*காரைநகர்.* (66942)

## திருமதி தில்லைநாதன் பாக்கியம்

காரைநகர், களபூமி, சந்திரந்தையைப் பிறப்பிடமாகவும் காரைநகர், சல்லை, தங்கோடையை வசிப்பிடமாகவும் தற்போது பண்டாரிக்குளம் முனியப்பர் கோயிலடியில் வசித்து வந்தவருமான திருமதி தில்லைநாதன் பாக்கியம் நேற்று (14.10.2007) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லைநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - சிதம்பரம் ஆகியோரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களன கணபதிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் அருளானந்தம், சுப்பிர்மணியம்(பண்டாரிக்குளம்), முருகமூர்த்தி, விக்கினேஸ்வரி, தர்மலிங்கம்(ஆசிரிய வளவாளர், மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவதேவி, புனிதவதி, கௌரி, கணேஷன், சிவசக்தி(ஆசிரியை, விபுலானந்தாக் கல்லூரி, பண்டாரிக்குளம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கோகுலன், மயூரி, லோகநவநீதன், ஆரணி, சிவசுகந்தன்(மருத்துவபீட மாணவன், கொழும்பு பல்கலைக்கழகம்), கிரிஜா, அமலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(16.10.2007) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுப்பிரமணியம்(மகன்)

*பண்டாரிக்குளம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களைக் காப்பதற்குத் தமிழக மக்கள் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்

## தமிழ் மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.15

தமிழக மக்கள் தமது இரத்த உறவுகளான ஈழத் தமிழர்களைக் காப்பதற்கான உடனடி அழுத்தத்தினை இந்திய மத்திய அரசுக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

காலத் தொடர்ச்சியாகத் தமிழினத்தை அழித்துவரும் சிங்கள அரசுகளின் தொடரில் இன்று இலங்கைத் தீவை ஆளும் மகிந்த அரசு தமிழ் மக்கள்மீதும் தமிழ் மாணவர்கள்மீதும் உச்ச வன்முறையினைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

மணிக்கோர் அப்பாவித் தமிழன் கொல்லப்பட்டும், கொத்துக் கொத்தாகக் கடத்தப்பட்டும் சித்திரவதைகளின் உச்சக்கட்டத்தினை நாளும் பொழுதும் அனுபவித்தும் வருகின்றனர். இந்நிலையில் சர்வதேசம் எந்தவொரு தீர்க்கமான முடிவினையும் எட்டாது, அரசின் செயற்பாடுகளுக்குத் தீர்க்கமான கண்டனங்கள் வெளியிடாது அரசுக்குத் தொடர்ந்து தாங்குதூணாக இருந்துவருகின்றது.

### தமிழர்களைக் காக்கவேண்டியது இந்தியாவின் தார்மீகக் கடமை

இத்தகைய இக்கட்டான சூழலில் இந்தியா தமிழர்களைக் காக்க வேண்டிய கட்டாயத்தில், தார்மீகக் கடமையை நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளது.

இந்நிலையில் தமிழர்களை அழிப்பதற்காக இந்திய அரசினைப் பயன்படுத்திவிடவேண்டும் என்பதில் இலங்கை அரசு தீவிரம் காட்டிவருகின்றது. இந்திய அரசினைத் தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்த முனையும் சிங்கள அரசுத் தலைவர்கள், இந்தியாவுக்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இந்தியாவுக்குச் சென்றுள்ள நிலையில் ஆறுகோடி தமிழர்கள் வாழும் இந்திய நாடு தொடர்ந்தும் தமிழர்களை அழிக்கும் சிங்கள அரசியல் சிந்தனைகளுக்கு ஊன்றுகோலாய் நின்றால் அது தமிழ் மக்களைக் கொதிக்கும் எண்ணைக்குள் தள்ளிவிடும் செயற்பாட்டுக்குச் சமனானதாகும்.

தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குப் பயங்கரவாதப் பெயர் சூட்டி, உலகினை ஏமாற்றி, பிரசாரங்களை மேற்கொண்டு மறுபுறத்தில் தமிழர் தாயகத்தில் தமிழர்களை அழித்தொழிக்கும் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தியிருக்கின்றது. உலக அரசுகள் இலங்கைக்கு வழங்கும் உதவிகள் அனைத்தும் தமிழர்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

### தமிழர் அழிப்புச் சிந்தனை செயற்பட இடமளிக்கக்கூடாது

தமிழர் தாயகத்தில் கொழுந்துவிட்டெரியும் அரச பயங்கரவாதத் தீயின் உஷ்ணத்தினை உணர்ந்தும் உணராமல் இந்திய அரசு பொறுமை காக்கும் நிலையினை நீடிக்கக் கூடாது. ஈழத்தமிழர் இடர் சுமந்த போதெல்லாம் வேதனையோடு குரல் கொடுக்கும் தமிழக மக்கள் அழிவுகளைச் சந்தித்த போதும் ஆதரவுக்கரம் நீட்டும் தமிழக உறவுகள், ஈழத்தமிழர்களுக்கு இழைக்கும் அநீதிகளுக்கு எதிராக எந்த நேரமும் சிந்தித்து குரல் கொடுத்துவரும் தமிழக மக்கள் - தமிழர்களின் குருதி தோய்ந்த கையோடு புனித பாரத பூமிக்குள் நுழையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் தமிழர் அழிப்புச் சிந்தனைகள் செயற்பட இடமளிக்க அனுமதிக்கக் கூடாதென பாச உணர்வோடும் துயரச் சுமையோடும் தமிழ் மாணவர்கள் நாம் உரிமையோடு தமிழக மக்களிடம் வேண்டி நிற்கின்றோம்- என்றுள்ளது.

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கிராம வீட்டுத்திட்டதிற்கு மின்சாரம்

யாழ்ப்பாணம்,ஒக்.15

பருத்தித்துறை கொட்டடி - தும்பளை கணக்கிலாவத்தை ஆலய வீட்டுத் திட்டத்திற்கு மின்சாரம் வழங்க இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். 2004 ஆம் ஆண்டு டிசெம்பரில் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மேற்படி கிராமம் பெரும் அழிவினைச் சந்தித்தது.

உலகவங்கி மற்றும் சேவாலங்கா நிதி நிறுவனங்கள் நவீன திட்டத்தின் கீழ் மேற்படி கிராமத்தில் வீடுகள் அமைத்துக் கொடுத்து உதவின.

புதிதாக அமைக்கப்பட்ட மேற்படி கிராமத்திற்கே - தும்பளை கணக்கிலாவத்தைக்கே- மின் இணைப்பு வழங்குவதற்கான துரித நடவடிக்கையின்கீழ் மின்கம்பங்கள் இடப்பட்டு வருகின்றன.

இதேவேளை - புதிதாகப் புனரமைப்புச் செய்யப்பட்ட வீடமைப்புத் திட்டத்திற்குச் செல்வதற்கு வசதியாக வீதிகள் அமைத்துத் தருவதற்குச் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபை முன்வரவேண்டும் என அவ்வூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-95)

# அனுமதிப்பத்திரமின்றி இயங்கிய மரக்காலைகளுக்குச் 'சீல்'

வலி.வடக்கு, ஒக்.15

மல்லாகம் நீதிநிர்வாகப் பகுதியில் அனுமதிப்பத்திரம் பெறாது இயங்கிவந்த ஆறு மரக்காலைகள் சுன்னாகம் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுச் சீலிடப்பட்டுள்ளன.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக உரிய அனுமதிப்பத்திரம் இன்றி இந்த மரக்காலைகள் இயங்குவதாகத் தெரிவித்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் பொலிஸசாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கை விசாரணை செய்த மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் உரியவர்களைப் பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கியதுடன் உரிய அரச மரக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கும் படியும் கட்டளையிட்டுள்ளார்.

மரக்காலை சீல் வைக்கப்பட்டுள்ளதால் அங்கு கடமையாற்றும் தொழிலாளர்கள் பாதிப்படைவதாகத் தெரிவித்து குறிப்பிட்ட காலத்தில் அனுமதிப்பத்திரம் பெற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (203-86)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# கசிப்பு உற்பத்திக்கு கோடா வைத்திருந்தவருக்கு அபராதமும் சிறைத்தண்டனையும்

பருத்தித்துறை, ஒக்.15

கசிப்பு உற்பத்திக்காக கோடா வைத்திருந்த நபருக்கு எட்டுமாத சிறைத் தண்டனையும் 75 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார் பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம்.

தும்பளை இலட்சுமணன் தோட்டத்தைச் சேர்ந்த வடிவேல் சிவசண்முகம் கோடா வைத்திருந்தபோது பருத்தித்துறை மதுவரிப் பரிசோதகர்களிடம் அகப்பட்டுக் கொண்டார். அவர் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார். இவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அபராதம் விதிக்கப்பட்டது. (1-218)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.15

கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றின் சில பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்**

செ.மனோஜா (161), ச.கபிலன் (160), சி.சிந்துஜா (158), கா.டீவிகா (149), ஜெ.கவிப்பிரியா (141), கி.மகீவன் (140).

**வல்வெட்டித்துறை அ.மி.த.க.பாடசாலை**

யோ.அபிராமி (173), சு.மயூரன் (160), ந.மாதுமையாள் (151), இ.திவ்யா (148).

**வல்வெட்டித்துறை றோ.க.த.க.பாடசாலை**

மு.சஞ்சீவன் (152), இ.தசாந்தினி (142).

**புற்றளை மகா வித்தியாலயம்**

நா.மனோஜா (163), வை.வித்தியா (156), க.கீர்த்தனா (156), ப.பானுசன் (152), ச.திருக்குமரன் (152), ஆ.சங்கீதா (152), மோ.மதுரன் (149), ர.சானுஜன் (143),ந.தர்சன் (141), ம.கனிஸ்ரா (141), க.சாஜீபன் (141).

**துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்**

தே.தேசிகன் (176), உ.நிவேதா (167), அ.அர்ஷானா (163), இ.பவன் (162), க.துஸ்யந்தன் (156), மு.ராகுலன் (155), கு.பிரணவன் (154), ம.ஆராதனா (154), க.யதுர்சன் (153), கி.பிரியங்கா (152), உ.நிரூஜா (149), ந.ஷனுஜன் (144), வி.கௌவேந்தன் (144), அ.சுபாசினி (142).

# நாகர்கோயில் மகா வித்தியாலயத்திற்கு கற்கோவளம் புனிதநகரில் புதிய கட்டடம்

## சிறுவர் பாதுகாப்பு நிதியம் அமைத்துக் கொடுத்துள்ளது

கட்டைவேலி, ஒக்.15

வடமராட்சி கிழக்கில் இராணுவ நடவடிக்கை காரணமாக 2000 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து சொந்த இடம் ஏதும் இல்லாமல் அல்லாடிக் கொண்டிருந்த நாகர்கோயில் மகாவித்தியாலயத்திற்குப் புதிய இடத்தில் இரு புதிய கட்டடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கற்றல், கற்பித்தல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் இந்த வேலைத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

கற்கோவளம், புனித நகரில் ஓலைக் கொட்டில்களில் இயங்கிவந்த இப் பாடசாலைக்கென புதிய கட்டடங்களை அமைக்க அதே இடத்தில் வேறு ஒருபகுதியில் பருத்தித்துறைப் பிரதேச செயலரினால் அரச காணி வழங்கப்பட்டது.

இக் காணியில் இரு கட்டடங்களைச் சிறுவர் பாதுகாப்பு நிதியம் கட்டிக் கொடுத்துள்ளது. அத்துடன் கற்றல் கற்பித்தலுக்கான உப கரணங்களையும் வழங்கியுள்ளது.

குடிதண்ணீர் பெறுவதற்காக விரைவில் கிணறு ஒன்றையும் அமைத்துக் கொடுக்கவுள்ளது. அத்துடன் யுனிசெப் நிறுவனத்தின் உதவியைப் பெற்று மலசல கூடங்களும் அமைக்கப்படவுள்ளன. தரம் ஒன்று தொடக்கம் 11 வரையுள்ள இப்பாடசாலையைப் புதிய இடத்திற்குப் புதிய கட்டடத்திற்கு அடுத்தவாரம் இடமாற்ற வுள்ளதாக அதிபர் எஸ்.திரவியராஜா தெரிவித்தார்.(203-160)

# நிகழ்வுகள்

வடமராட்சி கல்வி வலயத்தில் ஜி.ரி. இசற் உதவியுடன் நடத்தப்பட்டுவரும் பரிகாரக்கற்பித்தல் நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன என்று வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா தெரிவித்துள் ளார்.

ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளும் இன்று வழங்கப்படுமென மேலும் தெரிவித்தார். (203)

* * *

பெண்களுக்கு எதிரான வன்முறை எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிடையே பட்டிமன்றப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் 18 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் பங்குபற்றலாம். ஒரு போட்டிக் குழுவில் மூன்று பேர் பங்குபற்ற முடியும்.

விண்ணப்பங்களை அந்தந்த பிரிவு கிராம உத்தியோகத்தர்களிடமோ பிரதேச செயலகத்திலோ பெற்று நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் போட்டிக்குழுவின் தலைவரால் ஒப்படைக்க வேண்டும். போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேலதிக விவரங்களைப் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம். (202)

* * *

நல்லூர் கோட்டம் மற்றும் யாழ். கோட்ட மாணவர்களுக்கான சதுரங்கப் போட்டிகள் முறையே நாளை செவ்வாய்க் கிழமையும் மறுநாள் புதன்கிழமையும் காலை 8.30 மணிக்கு யாழ். வலயத்தில் இடம்பெறவுள்ளன.

தரம் 5 மாணவர்களுக்கு குழுவாகவும் தரம் 4 மாணவர்களுக்குத் தனிநபராகவும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (203)




சர்வதேச சிறுவர்கள், முதியோர் தினத்தையொட்டி வேலணை பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற விழாவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன், பிரதேச சிறுவர் மேம்பாட்டு அலுவலர் செல்வி ந.வானதி ஆகியோர் உரையாற்றுவதை முதல் இரு படங்களிலும் காணலாம். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மல்லாகம் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் நயினை நாகபூசணி வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் ஜே.ஜெயசிந்தனுக்கு துவிச்சக்கரவண்டி வழங்குவதை மூன்றாவது படத்திலும் விழாவில் கலந்து கொண்ட சிறுவர், முதியோர்களில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள் : லஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனைக்கோட்டை வயல் நிலங்களில் அனுமதியின்றி மண் ஏற்றுவதால் ப[illegible]பு

நவா[illegible]க்.15

ஆனைக்கோட்டைப் பகுதி வயல்களில் அனுமதியி[illegible] உழவு இயந்திரங்கள் மூலம் மண் ஏற்றிச் செல்வதால் அத[illegible] அருகிலுள்ள ஏனைய வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வெள்ளம் தேங்கி நிற்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அப்பகுதி விவசாயிகள் ஆனைக்கோட்டை கிராமசேவையாளர், அப்பகுதி விவசாய சம்மேளனத்தினர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர். (203-100)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த **யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய** மாணவர்களான



செல்வி ஸ்ரீரங்கநாதன் ஜீவிதா (147)

செல்வன் தவேந்திரராசா அஜிந்தன் (145)

ஆகியோரை மேலும் பல சிறப்புகள் பெற வாழ்த்துவதுடன் இவர்களை வழிநடத்திய அதிபர், கல்வியூட்டிய ஆசிரியர்கள், கரிசனை செலுத்திய பெற்றோர்களையும் மனதார வாழ்த்துகின்றோம்.

*யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், அல்வாய்கிழக்கு, அல்வாய்.*

*வாழ்த்துவோர்:* **பாடசாலை கல்விச் சமூகம்.** (சி/53935)

### தங்க நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை

செலான் வங்கி

செலான் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் 30.06.2006 வரையான காலப்பகுதியில் அடகு வைக்கப்பட்டு மீளப் பெறப்படாத நகைகள் ஏலத்தில் விற்கப்படவுள்ளன

| திகதி | ஏலம் இடம்பெறும் வங்கிக் கிளை | நேரம் | அடகு ஏற்கப்பட்ட வங்கிக் கிளை |
|---|---|---|---|
| 03.11.2007 | யாழ்ப்பாணம் | காலை 10 மணி | யாழ்ப்பாணம் |

**செலான் வங்கியானது தனது தனிப்பட்ட கிளையில் அடகு வைக்கப்பட்ட நகைகளை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை ஏலத்தில் விடும் உரிமையைக் கொண்டது. அத்துடன் முன் அறிவித்தலின்றி ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமையும் உடையது.**

உதவிப் போது முகாமையாளர் பகுதி III
வரையறுக்கப்பட்ட செலான் வங்கி,
7 வது தளம் செலான் தலைமைக் காரியாலயம்,
இல.90, காலி வீதி, கொழும்பு - 03
தொலைபேசி இல.011-4701727, 011-2456727 (சி/53976)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

924 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

**04 28 41 55**

கடகம்

**12-10-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 5237319 - 5252929

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 344,656 | 10/- | 3,446,560/- |
| 2 இலக்கங்கள் | 31,659 | 20/- | 633,180/- |
| 1 இல. + லக்கினம் | 31,279 | 30/- | 938,370/- |
| 2 இல. + லக்கினம் | 2,895 | 100/- | 289,500/- |
| 3 இலக்கங்கள் | 829 | 500/- | 414,500/- |
| 3 இல. + லக்கினம் | 88 | 5,000/- | 440,000/- |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 7,562,110/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 411,416 | | 8,585,610/- |

**இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-**

தொடர் இல.4362539 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 ஒக்டோபர் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்னறுவை | 5237978-1-66 |
| அனுராதபுரம் | 5250053-4-08 |
| கேகாலை | 5240170-8-26 |
| இரத்தினபுரி | 5241453-9-24 |
| அம்பாறை | 5238434-1-81 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## காரைநகரில் நெற்பயிர்கள் கட்டாக்காலிகளால் அழிப்பு

காரைநகர் பிரதேசத்தில் நெற்பயிர்களை கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த மாத நடுப்பகுதியில் பெய்த மழையை அடுத்து குறிப்பிட்டளவு விவசாயிகள் நெல் விதைப்பை மேற்கொண்டிருந்தனர்.

நெல்பயிராகி வளர்ந்துள்ள போதிலும் அவற்றினை கால்நடைகள் அழித்து வருகின்றன.

கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காத காரணத்தால் இவ்வாண்டு ஏனைய விவசாயிகளும் நெற்செய்கையில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கால்நடைகளைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-250)

## துணையிழந்தோர் மாதர்சங்கம் குருநகரில் மீண்டும் இயங்குகிறது

குருநகர் பகுதியில் இதுவரை காலமும் இயங்காது இருந்து வந்த துணையிழந்தோர் மாதர் சங்கம் மீண்டும் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

இச்சங்கத்தின் அங்குரார்பணக் கூட்டம் அண்மையில் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்புக் காரியாலயத்தில் தலைவர் இ.பொன்சியானுஸ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுமார் 150 இற்கும் மேற்பட்ட துணை இழந்த மாதர்கள் கலந்து கொண்டனர்.

துணை இழந்த மாதர்களின் பிள்ளைகளுக்கு இலவசமாக தையல் வகுப்புகளை நடத்துதல், பனைவள அபிவிருத்திச் சங்கத்தின் வழிகாட்டலில் பனை ஓலையால் பைகள் செய்யப் பழக்குதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (203 - 51)

### கண்ணீர் அஞ்சலி

யா/ வியாவில் சைவவித்தியாலய ஆசிரியை திருமதி தேவராசா மங்களேஸ்வரி

அவர்களின் அன்பு மாமி

திருமதி
**சரவணமுத்து கோமளவல்லி**

அவர்கள் காலமாகிய செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளதுடன் அமரரின் பிரிவினால் துயரடைந்திருக்கும் குடும்பத்தவர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், யா/வியாவில் சைவவித்தியாலயம், காரைநகர். (66939)

### கண்ணீர் அஞ்சலி

யா/ இந்துமகளிர் கல்லூரி ஆசிரியை



திருமதி
**ஸ்ரீரமணி அருள்வேல்**
அவர்களின் அன்புச் சகோதரி

திருமதி
**ரூபினி ரட்ணாகரன்(ரூபி)**

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைகிறோம். அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், நலன்புரிச்சங்கம் யாழ்.இந்து மகளிர் கல்லூரி. யாழ்ப்பாணம்.** (66940)

### மரண அறிவித்தல்

**பாலசிங்கம் நகுலேஸ்வரன்**
*(சின்னக்கண்ணன்)*



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும்கொண்ட பாலசிங்கம் நகுலேஸ்வரன் 7.10.2007 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பாலசிங்கம் - யோகமலர் தம்பதியரின் அன்பு மகனும் சிறிஸ்கந்தராசா-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், ராஜகுமாரியின் அன்புக் கணவரும், ருத்திரபைரவியின் அன்புத் தந்தையும், நவீனன், தாரணியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.10.2007) சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] புன்னாலைக்கட்டுவன்.

தகவல்: [illegible] (மாமா - [illegible]) (66941)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

2007 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 159 புள்ளி பெற்று சித்தியடைந்த **நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய** மாணவி



**செல்வி லக்ஷன்யா புவனேஸ்வரகுமார்**

மேலும் பல கலைகளும் பெற்று பல்கலைக்கழகம் செல்ல வேண்டுமென வாழ்த்துகின்றோம். அத்துடன் அவரது சித்திக்கு வழிகாட்டி, ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள், தென்னிந்தியத் திருச்சபை நிர்வாக ஆசிரியர்கள், பழனிபாவு கல்வி நிலைய ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்தும் அன்புள்ளங்கள்*
தாத்தா, அம்மம்மா, மாமாமார் குடும்பம், சித்தி, சித்தப்பாகுடும்பம்

*மேற்கு - 05, நெடுந்தீவு.* (66891)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007 இல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த **யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை** மாணவன்

**செல்வன் சுந்தரேஸ்வரன் ராகவன்**

அவர்களை கல்வியில் மேலும் சிறப்புகள் பெற வாழ்த்துவதுடன் கல்வி கற்பித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் நிறுவன ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்த்துவோர்:
பாட்டி, தாத்தா, மாமாமார், மாமிமார், சித்தப்பா, சித்திமார் மற்றும் உறவினர்கள்

*சரசாலை வடக்கு, சாவகச்சேரி.* (66585)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/நயினாதீவு ஸ்ரீநாகபூசணி வித்தியாலயத்தில்** 2007ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 149 புள்ளி பெற்று சித்தியடைந்த



**செல்வன் ஜெகதீஸ்வரன் ஜெசிந்தன்**

அவர்களை பல கலைகளும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவதோடு அவருக்கு கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்

பரிசில்கள் வழங்கி ஊக்கம் அளித்து உற்சாகப் படுத்தியவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: **உறவினர்கள்.** (66657)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த **கற்பகச்சோலை நன்மை விருத்திச்சங்க அறநெறி பாடசாலை** மாணவர்கள்

கங்காதரன் மாலவர்ணன் *(149 புள்ளி)*
*(யாழ்ப்பாணக் கல்லூரி)*

மயில்வாகனம் யசோதை *(144 புள்ளி)*
*(யா/பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை)*

இவர்களை மேலும் பலசாதனை புரிய குலதெய்வங்களின் கிருபையும் ஆசீர்வாதமும் கிடைக்க வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
*கற்பகச்சோலை நன்மை விருத்திசங்கம்,*
*கற்பகச்சோலை சனசமூக நிலையம்,*
*கற்பகச்சோலை கிராமமுன்னேற்ற சங்கம்,*
*கற்பகச்சோலை இளைய நட்சத்திர விளையாட்டுக்கழகம்.*

வட்டு. வடக்கு, சித்தங்கேணி. (66888)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ கரணவாய் மகா வித்தியாலயத்தில் 2007 இல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களான.

| | |
|---|---|
| செல்வன் ர.அனங்கன் | 171 புள்ளிகள் |
| செல்வி த.தனுசிகா | 164 புள்ளிகள் |
| செல்வன் நி.விதுசன் | 146 புள்ளிகள் |
| செல்வி சோ.புவியரசி | 146 புள்ளிகள் |
| செல்வி க.மிதுனுகா | 146 புள்ளிகள் |
| செல்வி சி.சிந்துஜா | 145 புள்ளிகள் |
| செல்வன் க.சுதர்சன் | 144 புள்ளிகள் |
| செல்வி ச.ஹிரெளஞ்சா | 142புள்ளிகள் |
| செல்வி ந.காயத்திரி | 141 புள்ளிகள் |

அனைவரையும் மனதாரப் பாராட்டி மேலும் பல சிறப்புகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவதுடன் இவர்களை நல்வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: **பெற்றோர்.** (சி/53961)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கோப்' உறுப்பினராக பசில் ராஜபக்ஷ

பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் (கோப்) உறுப்பினராக ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார இதனைத் தெரிவித்ததுடன் பொது கணக்குக் குழு (பீ.ஏ.சி.)வின் உறுப்பினராகவும் பசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ராஜினாமா செய்துள்ளதையடுத்தே அவ் வெற்றிடத்திற்குப் பசில் ராஜபக்ஷ எம்.பி.நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோன்று பொது கணக்குக் குழுவிலிருந்து அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன ராஜினாமா செய்ததையடுத்து அவ்வெற்றிடத்திற்கும் பசில் ராஜபக்ஷ எம்.பி.உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மட்டுநகரில் கிழக்கு மாகாணத் தமிழ் இலக்கிய விழா மூன்று தினங்கள் நடைபெறும்

இந்த ஆண்டுக்கான கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா இம்முறை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 10, 11, 12 ஆம் திகதிகளில் மூன்று தினங்களுக்கு கல்லடி சுவாமி விபுலாநந்தர் அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் இந்த விழா நடைபெறவுள்ளதாக மட்டக்களப்பு அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கல்வியமைச்சுடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்ட செயலகம் விழா தொடர்பான ஏற்பாடுகளை தற்போது மேற்கொண்டு வருகின்றது.

விழாவில் முதல் இரண்டு தினங்களிலும் ஆய்வரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 'கிழக்கின் பாரம்பரியக் கலைகளும் மரபும் மாற்றங்களும்' எனும் தலைப்பில் நடைபெற உள்ள இந்த இந்த ஆய்வரங்கில் 12 ஆய்வாளர்கள் பங்குபற்ற உள்ளனர்.

ஆய்வரங்கில் கலந்துகொள்வதற்காக கிழக்கில் இருந்து 100 பேராளர்கள் அழைக்கப்படவுள்ளனர். இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 50 பேராளர்களும், அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் இருந்து தலா 25 பேராளர்களும் பங்குபற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விழாவின் நினைவாக 'தமிழன்னை' உருவச் சிலையை திரைநீக்கம் செய்து வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் ஒரு தமிழனைக்கொல்ல 5,140 ரூபா ஒதுக்கீடு!

## பாதுகாப்புச் செலவு குறித்து அரியநேத்திரன் சீற்றம்

கொழும்பு, ஒக்.15

18 லட்சம் தமிழர்களைக் கொலை செய்வதற்காக 2008ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 92 ஆயிரத்து 555 கோடிரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு தமிழனைக் கொல்ல 5 ஆயிரத்து 140 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நாடாளுமன்றில் கூறியுள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட திருத்தச்சட்டமூலங்கள் தொடர்பாக ஒழுங்கு விதி மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வடக்கு-கிழக்கு மக்கள் 60 வருடங்கள் அடிமையாக்கப்பட்டுள்ளனர். இதனாலேதான் நாட்டின் பொருளா தாரம் வீழ்ச்சியடைந்திருக்கின்றது.

நவம்பர் 07இல் வரவு-செலவுத் திட்டம் கொண்டுவரப் படவுள்ளது. அதில் 2007ஆம் ஆண்டு பாதுகாப்பு செலவிற்காக 92 ஆயிரம் கோடிரூவுக்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் உள்ள 18 லட்சம் தமிழர்களைக் கொல்லவே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும்கிழக்கின் உதயம் மூலம் சிங்கள மயமாக்கல் இடம்பெற்று வருகின்றது. குடுமிமலைப் பகுதியில் பௌத்த விகாரை ஒன்றைக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தவிர எங்கும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு தமிழர்கள் கொல்லப்படுகின்றனர், துன்புறுத்தப்படுகின்றனர்.

தீர்வுயோசனையைத் தயாரிக்க நியமிக்கப்பட்ட சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவினால் எந்தப் பிரயோசனமும் இல்லை. அது வெறும்நாடகம்.

மறுபுறம் ஐக்கிய தேசியக் கட்சியும் சமஷ்டி நிலைப் பாட்டில் இருந்து விலகிவிட்டது. வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போது அரசைக் கவிழ்க்க ஐ.தே.கட்சி எமது ஆதரவைக் கோரியிருக்கின்றது.

ஆட்சி ஒன்றை உருவாக்குவதற்கும் ஆட்சியைக் கலைப்பதற்கும் யாரும் எம்மைப் பகடைக்காய்களாய் பயன்படுத்த எண்ணவேண்டாம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு கொள்கை உண்டு. அதை நாம் யாருக்காகவும் விட்டுக்கொடுக்க மாட்டோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு ஐ.தே. கட்சிக்கு தேவை என்றால் சமஷ்டி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அக்கட்சி தயார் என்று சொன்னால் அது தொடர்பாக நாம் பரிசீலனை செய்வோம்.

அதுபோல் அரசிற்கும் எமது ஆதரவு தேவை என்றால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி புலிகளுடன் பேசத் தயார் என்று அரசு கூறினால் அரசிற்கு ஆதரவு வழங்குவது பற்றிப் பரிசீலிப்போம்- என்றார். (சி)

# சுன்னாகம் பெரியமதவடி குடியிருப்பு சிறார்கள் முன்பள்ளியின்றிப் பாதிப்பு

இருபாலை,ஒக்.15

சுன்னாகம் பெரிய மதவடி குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள முன்பள்ளி பல வருடங்களாக இயங்காமையால் அப்பகுதிச் சிறார்களின் கல்வி சீர்குலைந்துள்ளதாக மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பெரிய மதவடிகுடியிருப்பு முகாமில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. அக்கிராமத்தில் மலசல கூடவசதி மற்றும் குடி தண்ணீர் வசதி என்பன மிகவும் குறைவாகவே உள்ளன. வீதியும் சீரற்றே காணப்படுகின்றது:

இதனால் மக்கள் பெரும் சிரமமடைந்து வருகின்றனர்.

அதுமட்டுமல்ல அக்கிராமத்தில் முன்னர் முன்பள்ளி ஒன்று இயங்கிவந்தது. அப்பகுதியில் வசிக்கும் சிறார்களுக்கு ஆரம்பக்கல்வியை வழங்கிவந்த முன்பள்ளி தற்போது வசதியீனங்களால் இயங்குவதில்லை.

முன்பள்ளியில் தளபாட வசதி மற்றும் கல்வி கற்பதற்குப் போதியளவு வசதி இருந்தும் வேறுசில காரணங்களால் இயங்க முடியவில்லை என்று சொல்லப்படுகின்றது.

இதனால் சிறார்கள் தமது ஆரம்பக் கல்வியை வெகு தொலைவிற் சென்றே கற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

சில பெற்றோர் தமது பிள்ளைகளை அதிக தூரம் சென்று கல்விகற்பதற்குரிய ஏற்பாட்டை செய்யமுடியாது பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இந்நிலையைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் உரியவாறு முன்பள்ளியை மீண்டும் இயங்க வைத்து சிறார்களின் கல்விப்பசியைத் தீர்ப்பதற்கு முன்வர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (203-79)



இந்தியாவுக்கு விஜயம் செய்த மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் சோனியா காந்தியை சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்.

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஒக்.15

வரையறுக்கப்பட்ட தபால் மற்றும் ரெலிகொம் ஊழியர் கூட்டுறவு வங்கிச் சங்கத்தினால் அங்கத்தவர்களின் பிள்ளை களுக்குப் புலமைப் பரிசில் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன.

2006 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜி. சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்த பல்கலைக்கழகக் கல்வியைக் கற்பவர்கள் மற்றும் 2007 ஆம் ஆண்டில் வெளியான 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் ஆகியோருக்கு இந்தப் புலமைப் பரிசில் வழங்கப்படவுள் ளன.

தனிப்பட்ட முறையில் அங்கத்தவர்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படமாட்டாது எனவும் இத்தகைய தகுதிகளை உடைய அங்கத்தவர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைத் 'தலைவர், லோட்டஸ் வீதி, கொழும்பு-01' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள் ளது.

மேலதிக விவரங்களைப் பெற விரும்புபவர்கள் 0112325607, 0112430470 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். (203 - 86)

* * *

வலி.வடக்கு,ஒக்.15

ஊவா மாகாண சுகாதார திணைக்களத்தில் உள்ள பேச்சுப் பயிற்சி சிகிச்சையாளர் பதவிக்கான விண்ணப்பங்களை ஊவா மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு கோரியுள்ளது.

18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்களும் பல்கலைக்கழகம் ஒன்றில் 2 வருட பேச்சுப் பயிற்சி நெறி டிப்ளோமாவைப் பூர்த்தி செய்தவர்களும் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

பரீட்சைத் திணைக்களத்தினால் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும் போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவுகள் இடம் பெறவுள்ளன.

மேலதிக விவரங்களை ஊவா மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவுடன் தொடர்பு கொள்வதன்மூலம் பெற்றுக் கொள்ள முடியும். (203-86)

* * *

வலி.வடக்கு,ஒக்.15

இலங்கை உயர் கல்வி அமைச்சினால் பொது நலவாய நாடுகளின் பட்டப் பின் படிப்புக்கான ஐக்கிய இராட்சியத்தின் புலமைப் பரிசிலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

-தகுதி உடையவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் உரிய விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மேலதிக விவரங்களையும் தகவல்களையும் உயர்கல்வி அமைச்சின் இணையத்தளமான www.mohe.hov.lk என்னும் முகவரியிலும் பார்வையிட முடியும். (203-86)

## வருணபகவானே வேண்டும் உன் கருணை ஐயா!

*வருண பகவானே! வருண பகவானே!*
*வேண்டும் உன்வரவு விரைவாய் இம் மண்ணினிலே!*
*கருணை புரிவாயே! கருணை புரிவாயே!*
*காசினிக்கு உணவளிக்கும் விவசாயிக்கு உதவிடவே*
*தருணம் இதுதானே! தருணம் இதுதானே!*
*தொழுகின்றோம் உனையே! தீர்த்திடுவாய் எம் துயரை*
*அருமை அருமையென அனைவரும் வாழ்த்திடவே*
*அள்ளிப் பொழிவாயே மழையை எங்கணுமே!*

- நாயன்மார்கட்டு பா.மகேந்திரதாசன்

# வாகனப்பதிவுப் புத்தகங்களில் ஒரு தொகுதி கொழும்பில் இருந்து வந்து சேர்ந்துள்ளது

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்.மாவட்ட மோட்டார் திணைக்களத்தில் பதிவுகள் செய்யப்பட்ட வாகன பதிவுப் புத்தகங்களில் ஒரு தொகுதி கொழும்பில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளது என்று யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

வாகன புத்தகங்களை அதன் உரிமையாளர்கள், தேசிய அடையாள அட்டை, 2007 ஆம் ஆண்டுக்கான வருமான வரி அனுமதிப் பத்திரம், 2007 ஆம் ஆண்டுக்கான காப்புறுதி அனுமதிப்பத்திரம், உடைமை மாற்றம் செய்திருப்பின் உடைமை மாற்ற பற்றுச் சீட்டு ஆகிய ஆவணங்களுடன் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு NPTH தொடரில் பதிவுப் புத்தகம், வாகன அடையாள அட்டை கிடைக்கப்பெற்று இலக்கத்தகடு கிடைக்காத மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களை தேசிய அடையாள அட்டை, பதிவுப்புத்தகம் என்பனவற்றுடன் திணைக்களத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. பதிவுப் புத்தகம் வந்து சேர்ந்துள்ள வாகன இலக்கங்கள் வருமாறு:

**500- 0549, 108 SRI 3984, 500- 1879, 500-0018, 110-9986, 500-3045, 500-6685, NPHE- 7234, NPJH- 9719, NPJL-6540, NPJP-0022, NPJP- 0174, NPJS- 3211, NPJV- 9297, NPJY- 8607, NPMB- 1257, NPMB-1296, NPMB-1306, NPMB-1374, NPMB-1392, NPMB-1403, NPME- 3466, NPME- 3583, NPMF- 3386, NPMF-3434, NPMF- 3660, NPMH- 8234, NPMH- 8245, NPMH- 8407, NPMH- 8493, NPMH- 8520, NPMH- 8524, NPMQ- 6519, NPMQ- 6539, NPMQ-6651, NPMQ-6671, NPMQ-[illegible], NPMQ-6717, NPMQ-6771, NPMQ-6789, NPMW- 3444, NPMX-3087, NPMX- 3128, NPMX-3339.** (203)

# தென்மராட்சியில் மழைவேண்டி கொடும்பாவி எரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.15

மழை வேண்டி தென்மராட்சி மட்டுவில் பிரதேசத்தில் கொடும்பாவி எரிக்கபட்டு வருகின்றது.

கடந்த 15 தினங்களாக ஆலயங்களில் விசேட பூஜைகள் நடத்தப்பட்டு வரும் இவ்வேளையில் மழை வேண்டி கொடும்பாவி கட்டி வீதி வீதியாக இழுத்துக் கொண்டு வயற்கரையில் வைத்து பலர் ஒப்பாரி வைக்க எரிக்கப்பட்டது.

கொடும்பாவி எரிக்கப்பட்டதன் பினர்னர் இரவு தூறல் மழை பெய்ததையடுத்து எதிர்வரும் நாள்களில் பிரதேச மக்களால் கொடும்பாவிகள் எரிக்கப்படவுள்ளன. (203-207)

# திருமலை, வவுனியாவில் வெடிபொருள்கள் மீட்பு

கொழும்பு ,ஒக .15

திருகோணமலை, சாம்பல் தீவுப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை முற் பகல் 10.30. மணியளவில் மரத்தின் உச்சியில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த கிளைமோர்க்குண்டு ஒன்றினைப் படையினர் மீட்டிருக்கின்றனர்.

அப்பகுதி பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்தே அந்தக் கிளைமோர்க் குண்டை படையினர் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் மைக்றோ பிஸ்டல் ஒன்றினையும் மீட்டுள்ளனர் என்று படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இதேவேளை, வவுனியா, போக்கிர வன்னி மற்றும் பெரியகுளம் ஆகிய பகுதிகளில் கடந்த வியாழக்கிழமை படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் நிலக்கண்ணி வெடிகள்- 360, ஆட்களுக்கு எதிராகப் பயன் படுத்தப்படும் குண்டுகள்- 60 மற்றும் கிளைமோர்க் குண்டுகள் - 02 ஆகியவற்றை கண்டுபிடித்துள்ளனர் என்றும் படைத்தரப்பு வட்டாரங்கள் குறிப்பிட்டன. (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கைதடி மேற்கைச் சேர்ந்த சுரேந்திரன் ஜீவராணி தம்பதியரின் செல்வப் புதல்வி **லாவண்யா** தனது நான்காவது பிறந்தநாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் இன்று (15.10.2007) திங்கட்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். லாவண்யாவை கைதடி அம்மம்மா, பெரியமாமா, அத்தை, மச்சாள், அத்தான், சித்திமார், சித்தப்பாமார், அண்ணா, அக்கா, கிருபா அன்ரி, நீர்கொழும்பு அப்பம்மா, அப்பப்பா, பெரியப்பா, பெரியம்மா, அக்கா, சித்தப்பா, மாமா, மாமி, மச்சாள், டென்மார்க் பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார், கனடா சித்தி, சித்தப்பா, அண்ணன்மார், லண்டன் சித்தி, சித்தப்பா ஆகியோர் பிள்ளையார் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
*க.கமலம் (அம்மம்மா)*
*கைதடி.*

*க.நாகராசா,*
*கதிரொளி வீடியோ, கைதடி.* (66881)

## நன்றி உரைக்கின்றோம்

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சுனாமியால் பாதிக்கப்பட்டு கொட்டடி கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்து தும்பளை, கணக்கிலாவத்தை ஆலயச் சூழலில் அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் வசித்து வரும் எமக்கு இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுத்த இலங்கை மின்சார சபையின்

- பிரதி பொதுமுகாமையாளர் *(வடக்கு)*
- மின்சாரப் பொறியியலாளர் *(நிர்மாணமும் திட்டமிடலும், யாழ்ப்பாணம்)*
- மின்சாரப் பொறியியலாளர் *(யாழ்ப்பாணம்)*
- மின் அத்தியட்சகர்கள் *(வடமராட்சி)*
- மின்சார சபை உத்தியோகத்தர்கள்
- மின்சார சபை ஊழியர்கள்

அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இவர்களது பணி வாழ்வு சிறப்படைய இறைவனை வேண்டுகின்றோம்.

**சுனாமி வீட்டுத்திட்ட மக்கள்,**
**கணக்கிலாவத்தை,**
**தும்பளை.**

(66897)

## அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள/ மாவட்ட நீதிமன்றத்தில் விசாகேசஐயர் பெண் புவனேஸ்வரி அம்பாள் அரசகேசரி பிள்ளையார் கோயிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி, யாழ்ப்பாணம்.

வழக்கு இல: 674/D எதிர் வழக்காளி

சிவகடாட்ச குருக்கள் விசாகேச ஐயர்
பத்திரகாளி அம்மன் கோயிலடி, தாவடி, யாழ்ப்பாணம்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி

தமக்கும் உமக்குமிடையேயுள்ள திருமணத்தை ரத்துச் செய்வதற்காக

இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2007 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 15 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகிறீர்.

பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆ.சிறீமோகன்.
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ் வழக்கு ஏற்படுத்தப்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

கையொப்பம், பதிவாளர்.

2007 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 10 ஆம் நாளாகிய இன்று. (66917)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007 இல் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவி செல்வி

**விமலேந்திரன் ஜானுகா**

அவர்களை மேலும் பல சிறப்புகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கம் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
தெய்வேந்திரன் பெரியப்பா குடும்பம். (66911)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**ஆறுமுகம் சுதந்திரராஜா**

மலர்வு 04.02.1960 உதிர்வு 15.09.2007

எம் அன்புச் செல்வமே!
சொல்லாமல் கொள்ளாமல்- சடுதியாய்
நீ சென்ற மர்மம்தான்- என்ன?
இனி எங்கு காண்போம் உம் திருமுகத்தை!

*இன்று (15.10.2007) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*மயிலணி வடக்கு,*
*சுன்னாகம்.* (சி/53981)

**ஆறுமுகம் குடும்பத்தினர்.**

## யா/இந்து மகளிர் கல்லூரி

பழைய மாணவர் சங்க ஒன்று கூடலும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் - 2007

*காலம்:* 25.10.2007 வியாழக்கிழமை
மு.ப. 10 மணி

*இடம்:* கல்லூரி விசாலாட்சி மண்டபம்

கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(66937) **இணைச் செயலாளர்.**

## ஓராண்டு நினைவஞ்சலி

எமது குடும்பத் தலைவர்
அமரர்
**வல்லிபுரம் பாலசுந்தரம்**
(இளைப்பாறிய போமன்- CTB)
*திதி: 15.10.2007*



**தோற்றம்** 20.06.1934 **மறைவு** 26.09.2006

எம்மைப் பெற்று வளர்த்து
கல்வி தந்து உடல் வருத்தி
எம் உயர்வுக்கு உழைத்த உத்தமரே!
ஓராண்டு ஆனாலும் உங்கள் நினைவு
எம்மை விட்டு அகலாது.

சாரதா வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (66914)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

## கண்ணீர் அஞ்சலி




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் கணிதப்புள்ளி விவரவியல்துறைத் தலைவரும், முதுநிலை விரிவுரையாளரும், யாழ். புகையிரத நிலைய ஆலடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாவும் ஆகிய

**பொன்னையா மகினன்**

அவர்களது திடீர்மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளதுடன் அமரரின் பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தவர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆலடி விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

ஆலடி விநாயகர் ஆலய
தொண்டர்கள், அடியார்கள்,
(66938) அயலவர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
05.09.1944
உதிர்வு
15.09.2007

## அமரர் கணபதி சபாபதி

*15.09.2007 அன்று சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், சகல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், உதவிகள் புரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (15.10.2007) திங்கட்கிழமைஅன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.*

*ச. புஸ்பராஜா (மகன்),*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.* (66831)

**குடும்பத்தினர்.**

## விற்பனைக்கு

உடன் சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் கோழி 1Kg 550/= மட்டுமே. நாசன் பாம், இல.158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## சலரோக நோயாளருக்கு இலவச வைத்தியசேவை

சுழிபுரம், ஒக்.15

மூளாய் கூட்டுறவு ஐக்கிய சங்க வைத்தியசாலையில் சலரோக நோயாளர்களுக்கு இலவச வைத்திய சேவை நடைபெற்று வருகின்றது.

இதனால் மாதம் தோறும் பல கிராமங்களில் இருந்து வந்து நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

[illegible] (203-28)

## மரண அறிவித்தல்



**தருமலிங்கம் குணசீலன் *(குணம்)***

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட தருமலிங்கம் குணசீலன் (06.10.2007) சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் கினிதாவின் அன்புக் கணவரும் யஸ்மிலா, யது, யதுபா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தருமலிங்கம்- பரமேஸ்வரி தம்பதியரின் மகனும் தருமசீலன் (இத்தாலி), அமரர் தயாசீலன் (நீர்வேலி), சந்திரசீலன் (கனடா), தவஞானகி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கேதீஸ்வரன் (கனடா), பார்த்தீபன் (பாரிஸ்), மகாலட்சுமி (இத்தாலி), லதா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் மங்கையர்க்கரசி, மகேஸ்வரி, பஞ்சலிங்கம், கனகலிங்கம், சோதிலிங்கம் ஆகியோரின் பெறாமகனும் சின்னராசன் (அதிபர்), சிவபாதம் ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற கந்தையா- சின்னம்மா தம்பதியரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜேர்மனியில் இன்று (15.10.2007) திங்கட்கிழமை தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

*கரந்தன் வீதி,*
*நீர்வேலி தெற்கு.* (66908)

தகவல்:
திரு. திருமதி சின்னத்துரை தருமலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி: 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# இலங்கை நிலைமை தொடர்பாக ஆர்பர் அம்மையாரின் கையாள்கை

இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாகக் காத்திரமான விடயங்களை வெளிக்கொண்டு வரும் என எதிர்பார்க்கப்பட்ட, மனித உரிமைகளுக்கான ஐ.நா.தூதுவர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரின் இலங்கை விஜயம் முடிவடைந்துவிட்டது.

எதிர்பார்க்கப்பட்டபடி, இலங்கை நிலைமை தொடர்பான தெளிவான பார்வை ஒன்றை ஆர்பர் அம்மையாரின் இந்தப் பயணம் மூலம் உலகம் தரிசிக்கக்கூடிய நல்லதோர் வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

இலங்கையில் மிக மோசமாக இடம்பெறும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க ஐ.நாவின் அவதானிப்பு அலுவலகம் ஒன்றை இலங்கையில் ஸ்தாபிக்க வேண்டும் என்பதில் ஐ.நா.உறுதியாக இருப்பதும் -

அதற்கு இடமளிப்பது இல்லை என்பதில் இலங்கை அரசு பிடிவாதமாக இருக்கின்றது என்பதும் -

ஆர்பர் அம்மையாரின் கொழும்பு விஜயத்தின் முடிவின் போது நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் தெளிவாக வெளிப்பட்டன.

இலங்கை விவகாரத்தைக் கண்காணிப்பதற்காக சர்வதேச அமைப்புகள் இலங்கைக்கு வருவதற்கும், இங்கு ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கு அனுமதிப்பது இல்லை என்பதிலும் அரசு உறுதியாக இருக்கின்றது.

மேற்படி அலுவலகம் திறப்பதைப் பிரேரிக்கும் விதத்தில் ஆர்பர் அம்மையார் தெரிவித்த கருத்துக்கு அதே பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து அரசின் திட்டவட்டமான நிராகரிப்புப் பதில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுவிட்டது.

இலங்கை அரசின் சார்பில் அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் பங்குபற்றிய இடர் முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இந்த விடயத்தை உறுதியாகத் தெளிவுபடுத்தினார்.

அந்த மாநாட்டில் வைத்து மனித உரிமைகளுக்கான ஐ.நா.தூதுவர் ஆர்பர் அம்மையார், தெரிவித்த கருத்துகளின் சாராம்சம் இங்கு நோக்கற்பாலது.

*"மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் இலங்கை அரசுக்கும் ஐ.நாவுக்கும் இடையில் வெறும் தொழில்நுட்ப உதவிப் பரிமாற்றம் இருந்தால் மட்டும் போதுமானது என நான் நம்பவில்லை. மக்களுக்கு நன்மைதரும் விதத்தில் இதில் ஐ.நாவின் பங்களிப்பு உயர்ந்தளவுக்கு மேம்படுத்தப்படவேண்டும்.*

*"மனித உரிமை மீறல்கள் கட்டுமட்டில்லாமல் நடக்கின்றன. இவை அரசுக்கு எதிரான - புலிகளின் வெறும் பிரசார உத்தியின் அடிப்படையிலான - குற்றச்சாட்டுகள் என்று கூறப்பட்டாலும் கூட, விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டிய பல விடயங்கள் அவற்றில் புதைந்திருப்பதை உணர முடிகின்றது.*

*"பயங்கரவாதத்தை ஒழிக்கும் நோக்குடன் இலங்கை அரசு கொண்டு வந்துள்ள அவசரகாலச்சட்ட விதிகள் தொடர்பான இறுக்கமான ஏற்பாடுகள், சட்டத்தின் ஆட்சியில் ஏற்பட்டுள்ள மிக மோசமான நலிவு நிலைமை, குற்றமிழைத்தோரைச் சட்டத்தின் பிடியிலிருந்து காப்பாற்றும் விசேட சட்டவிலக்களிப்பு வசதிகள் போன்றவை மனித உரிமைகள் தொடர்பான விடயத்தில் அபாய எச்சரிக்கையை ஏற்படுத்துவனவாக உள்ளன.*

*"ஊன்றிய கவனிப்புடன் கூடிய விசாரணைகள், குற்றமிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்துதல், அத்தகையோரைத் தண்டித்தல் போன்றவை தொடர்பாக இறுக்கமான சட்ட ஏற்பாடுகள் இல்லாமை கவலையைத் தருகின் றது."*

- இப்படியெல்லாம் தமது இலங்கை விஜய முடிவில் ஆர்பர் அம்மையார் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

ஆர்பர் அம்மையார் தமது இலங்கை விஜயத்தை அடுத்து. கொழும்பில் தெரிவித்த கருத்துகளில் இருந்து ஊன்றிக் கவனிக்கத்தக்க அம்சங்களாக வெளிப்பட்ட விடயங்களை இனிப் பார்ப்போம். அவை:-

* *மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று இலங்கை அரசு கூறினாலும், அவ்வாறு நேர்மையாக விசாரிக்கப்படவேண்டிய பல்வேறு சம்பவங்கள் இன்னும் விசாரிக்கப்படாமலேயே உள்ளன.*
* *அவ்வாறு நிலுவையில் விடப்பட்டிருக்கும் பல்வேறு மனித உரிமை மீறல்கள் விசாரிக்கப்படுவதற்கு ஆவன செய்யப்பட வேண்டும்.*
* *இலங்கையில் மோசமாக இடம்பெறும் மனித உரிமை மீறல்களை விசாரணை செய்வதற்கு இலங்கையில் தற்சமயம் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள் போதுமானவையல்ல.*
* *குற்றச்சம்பவங்கள் குறித்து விசாரிக்கப்படாத நிலைமை நீடிப்பது பெரும் குழப்பத்தைத் தருகின்றது.*

- இவையே ஆர்பர் அம்மையார் வெளிப்படுத்தும் முக்கிய விடயங்களாகும்.

ஏற்கனவே சர்வதேச ரீதியில் சர்ச்சைக்குரிய - முக்கிய தேசங்களின் - மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களைக் கையாண்ட நிரம்பிய அனுபவம் பெற்றவரே லூயிஸ் ஆர்பர் அம்மையாராவார்.

முன்னாள் யூகோஸ்லாவியாவிலும், ருவாண்டாவிலும் மிக மோசமாக இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து, சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்து, அந் நாடுகளின் தலைவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை நடத்திய முன் அனுபவம் ஆர்பர் அம்மையாருக்கு நிறையவே உண்டு.

சர்வதேச நீதிமன்றத்தில் சிறந்த வழக்குத் தொடுநராகப் பணியாற்றிய ஆர்பர் அம்மையாருக்கு, இலங்கைக்கு உள்ளே இனப்பிரச்சினை ரீதியாகத் தமிழர் அடக்கி, ஒடுக்கப்பட்டு, அவலப் படுத்தப்படும் வாழ்க்கை நிலையைப் புரிந்து கொள்வது (அவருக்கு) ஒன்றும் அப்படிக் கஷ்டமான விடயமே அல்ல.

இந்தப் பின்னணியில் -

இங்கு தாம் கண்ட உண்மைகளை சர்வதேச மயப்படுத்தி, இலங்கைப் பிரச்சினையில் மேற்குலகு உட்பட்ட பெரும்பான்மை சர்வதேச சமூகத்துக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த ஆர்பர் அம்மையார் உதவி செய்வார்; உறுதியாக நடவடிக்கை எடுப்பார் எனத் தமிழர்கள் நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றனர்.

## குடாநாட்டுக்குத் தேவையான பொருள்கள்

# காங்கேசன்துறை, மயிலிட்டித் துறைமுகங்களில் நாளாந்தம் 1,000 மெற்றிக்தொன் இறக்கப்படுகிறது

யாழ்ப்பாணம்,ஒக்,15

கொழும்பிலிருந்து தருவிக்கப்படும் பொருள்கள் காங்கேசன்துறை, மயிலிட்டி ஆகிய துறைமுகம்களில் நாளாந்தம் இறக்கப்பட்டு வருகின்றன. ஆகக் குறைந்தது மொத்தம் ஆயிரம் மெற்றிக் தொன் பொருள்கள் கப்பல்களில் இருந்து இறக்கப்படுகின்றன.

யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி இத்தகவலைத் தெரிவித்தார். குடாநாட்டு நிலமைகள் தொடர்பாக குடாநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கும் சந்திப்பு ஒன்று நேற்றுப் பலாலியில் இடம்பெற்றது.

அச்சந்திப்பை அடுத்து பத்திரிகையாளர்களை மயிலிட்டித் துறைமுகத்துக்கு அழைத்துச் சென்ற தளபதி அங்கு பொருள்களை இறக்கும் பணிகளை காண்பித்தார்.

மயிலிட்டியில் தற்சமயம் சிமெந்து இறக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. ஐ.நா அமைப்புக்கள் குடாநாட்டில் மேற்கொண்டுவரும் பணிகளை முன்னெடுக்கவும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடமைத்துக் கொடுக்கவும் இப்போது தருவிக்கப்பட்டுள்ள சிமெந்து பயன்படுத்தப்படும் என்று தளபதி தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து எடுத்துவரப்படும் பொருள்களை துறைமுகத்திலிருந்து எடுத்து செல்வதற்கு நூறு லொறிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பொருள்களை ஏற்றியிறக்கும் பணிகளைச் செய்வதற்கும் குடாநாட்டைச் சேர்ந்த தொழிலாளர்களே அமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் -

காங்கேசன்துறை துறைமுகத்திலும் அத்தியாவசியப் பொருள்களை கப்பலில் இருந்து இறக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன - என்றும் அவர் தெரிவித்தார். (அ-1)



மயிலிட்டித் துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி குறித்து அங்கு வைத்து யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி குடாநாட்டு பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கும்போது எடுக்கப்பட்ட படங்கள்.
*(படங்கள் : பலாலி ஊடகப் பிரிவு)*

# வடக்கில் ஆங்காங்கே மோதல்கள்!

கொழும்பு,ஒக். 15

வடக்கின் சில பகுதிகளில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் ஆங்காங்கே மோதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முகமாலையிலுள்ள படையினரின் முன்னரங்க நிலையில் நேற்று முன்தினம் மாலை 4 மணி யளவில் இராணுவத்தினரின் பிரதேசத்துக்குள் ஊடுருவ முயன்ற விடுதலைப் புலிகளை அவதானித்த படையினர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வவுனியா, இரட்டைப் பெரியகுளம் மற்றும் பெரியதம்பனை ஆகிய இடங்களில் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொரு சிப்பாய் படுகாயமடைந்துள்ளார் என்று பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

மன்னார், பிரப்பங்கண்டல் பகுதியில் சோதனை நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை, நிலக்கண்ணிவெடி வெடித்ததில் படைச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எதுவித தகவல்களும் வெளிவரவில்லை.

இதேவேளை, யாழ்ப்பாணம், சங்கானைப் பகுதியில் நேற்றுக் காலை படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் ரி-56 ரகத் துப்பாக்கி, அதற்குப் பயன்படுத்தும் ரவைகள் - 66 மற்றும் சைனைட் குப்பி-03 ஆகியவற்றைக் கண்டுபிடித்தனர் என்றும், மட்டக்களப்பு, வாழைச்சேனை மேற்குப் பகுதியில் பொதுமக்கள் வழங்கிய தகவலொன்றினையடுத்து படையினர் மேற்கொண்ட தேடுதலில் 6 கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் படைத் தரப்பினர் மேலும் தெரிவித்திருக்கின்றனர். (சி)

# குடுமிமலையில் விகாரை அமைக்க இடம் தெரிவு செய்யப்பட்டது?

கொழும்பு,ஒக்.15

மட்டக்களப்பு குடுமிமலையில் பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கான தீவிர முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 10 ஆம் திகதி அங்கு சென்ற 16 பேர் அடங்கிய பௌத்த பிக்குகள் குழுவொன்று அங்கு பௌத்த விகாரை அமைப்பதற்கான இடத்தைத் தீர்மானித்துவிட்டுத் திரும்பியது என்று சொல்லப்படுகிறது.

மட்டக்களப்பு அரச அதிபர் உட்பட அங்குள்ள அரச அதிகாரிகள் எவருக்கும் தெரியாதவகையில் மிகவும் இரகசியமாகவே பிக்குகளின் இந்த விஜயம் அமைந்திருந்தது என்று தகவல்கள் கூறுகின்றன.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் படையினரின் ஊடாகவே செய்யப்பட்டன என்றும் அறியமுடிகின்றது.

அரசால் கிழக்கில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் கிழக்கின் உதயம் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் இவ்விகாரை அமைக்கும் திட்டம் வருகிறது என்றும் வெகு விரைவில் இவ்விகாரையைக் கட்டி முடிப்பதற்கான முயற்சியில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 11ஆம் திகதி நாடாளுமன்றில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன், குடுமிமலையில் பௌத்த விகாரையை அமைப்பதற்கு அரசு திட்டமிட்டு வருகிறது என்று கூறி அதற்குத் தனது கண்டனத்தைத் தெரிவித்திருந்தார். (சி)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி - 29 : | செவ்வாய்க்கிழமை 16.10.2007 |
| திதி : பஞ்சமி | முன்னிரவு 07.36 |
| நட்சத்திரம் : | கேட்டை முன்னிரவு 10.34 |
| சுபநேரம் | : 10.32 - 12.02 |
| ராகுகாலம் | : 03.02 - 04.32 |

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குப் போட்டியாகப் புதியது உருவாகும்?

கொழும்பு,ஒக்.15

வடக்கு - கிழக்கிற்கு வெளியேயுள்ள முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்த புதிய முஸ்லிம் அரசியல் கட்சியொன்றை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

வடக்கு - கிழக்குக்கு வெளியேயுள்ள முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பக்கசார்பான முறையில் செயற்பட்டு வருகின்றது என்று குற்றம் சுமத்தியிருக்கும் ஒரு சாரார், முஸ்லிம் காங்கிரஸுக்கு போட்டியாக - அதனை எதிர்த்து - இந்தப் புதிய கட்சியை உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று அறிய முடிகின்றது.

கொழும்பிலும் வடமேல் மாகாணத்தின் முக்கிய நகரம் ஒன்றிலும் இக்கட்சியை உருவாக்குவது தொடர்பான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றனவாம்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் வேறு, வடக்கு - கிழக்கிற்கு வெளியேயுள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகள் வேறு என்ற யதார்த்தத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெளிவாக விளங்கிக்கொண்டுள்ள போதிலும் அவ்விரு பிரச்சினைகளையும் ஒன்றாக்கி, வடக்கு - கிழக்குக்கு வெளியேயுள்ள முஸ்லிம்களின் உண்மையான பிரச்சினைகளை மூடி மறைக்க முயல்கிறது என்று குற்றம்சாட்டியே இப்புதிய கட்சியை உருவாக்க முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிகிறது.

வடக்கு - கிழக்குத் தமிழர்களின் பிரச்சினை வேறு, மலையகத் தமிழர்களின் பிரச்சினை வேறு, தெற்குத் தமிழர்களின் பிரச்சினை வேறு என்ற உண்மையை தமிழர் தரப்பு நன்கு உணர்ந்து அதற்கேற்ப அம்மூன்று பிரச்சினைகளையும் தனித்தனியாகக் கையாண்டு வருவதைப் போல வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினையும் வடக்கு - கிழக்கிற்கு வெளியேயுள்ள முஸ்லிம்களின் பிரச்சினையும் தனித்தனியே கையாளப்பட்டால் மாத்திரமே அப்பிரச்சினைகள் உரிய முறையில் தீர்க்கப்படமுடியும் என்ற நிலைப்பாட்டில் தாம் உள்ளதாகவும் இதனை அடிப்படையாக வைத்தே புதிய கட்சியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அக்கட்சியை உருவாக்கவுள்ள வட்டாரம் தெரிவிக்கின்றது. (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடு: நிபுணர் குழுவின் நீதிபதி பகவதி அதிருப்தி

தேர்ந்தெடுக்கப்பட்ட பதினாறு படுகொலைச் சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்கு கடந்த நவம்பர் மாதத்தில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, இரண்டு சம்பவங்கள் தொடர்பாகவே விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. அந்த விசாரணைகளை கூட எப்போது முடிவடையும் என்று சொல்வதற்கு இல்லை எப்போது முடிவுறும் என்பது குறித்து எம்மால் கூறவும் முடியாது.

இவ்வாறு அதிருப்தி தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய நியமிக்கப்பட்ட அனைத்துலக நிபுணர் குழுவின் தலைவர் சி.என்.பகவதி.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் கூறியிருப்பதாவது-

எவ்வளவு விரைவான விசாரணைகளைத் தொடங்கி முடிக்க முடியுமோ அந்த அளவு விரைவாக நடத்த வேண்டும். அந்த விசாரணை ஆணைக் குழுவின் காலம் எதிர்வரும் நவம்பரில் முடிவடைகிறது. ஒருவேளை அதனது காலம் நீடிக்கப்பட்டாலும் கூட எத்தனை காலத்துக்கு இது நீடிக்கும் என்றும் கூறமுடியாது. ஆகையால் கண்டிப்பாக தாமதிக்கக் கூடாது. இந்த விசாரணைகளை மேற்கொள்வதில் ஏன் இத்தனை தாமதம் என்பதை உணர்ந்த கொள்வதில் தனிப்பட்ட முறையில் எனக்குக் கடினமானகத் தான் உள்ளது.

திருகோணமலையில் 5 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தனியாரினது உதவிகளை பயன்படுத்தியமை குறித்தும் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால் மூதூரில் 17 அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இன்னமும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பிலேயே உள்ளது.

அதேபோல் இதர வழக்குகள் எப்போது விசாரணைக்கு எடுக்கப்படும் என்று தெரியவில்லை. ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு முன்பாக சட்டமா அதிபர் திணைக்களம் விசாரணைகளுக்கு பொறுப்பாக செயற்படக் கூடாது. இதற்கான பல காரணங்களை நாம் விளக்கியுள்ளோம். அது தொடர்ந்தால் நாம் எதுவும் செய்ய இயலாது. எமது எதிர்பார்பைத் தெரிவித்திருக்கின்றோம். எதிர்பார்பைத் தெரிவிப்போம். - என்றார் அவர்.

(அ)

## பதுளையில் 13 பேர் கைது

கொழும்பு, ஒக்.15

பதுளைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை முதல் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது சந்தேகத்தின் பேரில் 13 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இவர்களைத் தொடர்ந்து தடுத்து வைத்து விசாரணை செய்த பொலிஸார் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர். (சி)

## 3 கடற்படையிரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்த மூன்று சடலங்களும் நேற்று முன்தினம் குருநகர் கடலில் இடம்பெற்ற மோதலின்போது காணாமல் போயிருந்த கடற்படையினருடையவைதான் என்பதை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார உறுதிப்படுத்தினார். (சி)

## அரச படைகளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுகளுக்கு எப்போதும் வந்ததில்லை. பெரும் படைத்துறை வெற்றிகளைத் தொடர்ந்து தமக்கு ஒரு மூச்சுவிடும் காலத்துக்காகவே விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வருவதுண்டு.

புலித்தேவனின் பேச்சு எதிர்கால மோதல்களை எதிர்வு கூறிய போதும், அரசின் கடந்த கால நிகழ்வுகள் கூட எதிர்வரும் மாதங்களில் விடுதலைப் புலிகளின் பிரதேசங்களை கைப்பற்றும் முயற்சிகளை பிரதிபலிப்பதாகவே உள்ளன.

பாதுகாப்பு அமைச்சுக்கு 2008ஆம் ஆண் டுக்காக பெருமளவு நிதி ஒதுக்கீடுகள் அரசின் இராணுவ தயாரிப்புகளையே எதிர்வு கூறுகின்றன. பேச்சுவார்த்தைக்கு திரும்ப வைப்பதற்காக விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்த வேண்டும் என்பது அதன் அரசியல் ஆகும்.

வரவு -செலவுத்திட்டத்தில் 2008ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு செலவீனமாக 166.447 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் 139.447 பில்லியன் ரூபா புதிதாக படையினரைச் சேர்ப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயுதக் கொள்வனவுக்கும் 2007ஆம் ஆண்டைவிட, அடுத்த வருடத்துக்கு 19 சதவீதம் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

படையினரின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்புக்கள் ஏற்பட் டுள்ள நிலையில் பாதுகாப்புச் செலவீனம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. சிறிலங்கா படையினரின் எண்ணிக்கை 2006 மற்றும் 2007 ஆண்டுகளில் 74,619 ஆக உயர்ந்துள்ளது.

இவற்றில் 31,582 பேர் இராணுவத்திலும், 10,891 பேர் கடற்படையிலும் இணைந் துள்ளனர். விமானப்படையில் 4621 பேர் இணைந்துள்ளனர். இது 100 விகித அதிகரிப்பாகும். சிறப்பு அதிரடிப்படையினரின் எண்ணிக்கையும் 1,496ஆக அதி கரித்துள்ளது. முன்னர் ஊர்காவல் படையி னர் என அழைக்கப்பட்ட படையினர் தற் போது பொதுமக்கள் பாதுகாப்பு படை என்ற அமைப்பாக மாற்றப்பட்டுள்ளது. அவர்களின் மொத்த எண்ணிக்கை 34,900 ஆகும்.

கடந்து இரு வருடங்களில் மஹிந்தவின் அரசு படையினர் தொடர்பில் அதிக கவனம் எடுத்துள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் வானத்தை தொடும் போதும் படை நடவடிக்கைகளை முன்னெடுப்பதில்தான் அரசு குறியாக உள்ளது என்பதை அதிகரித்துள்ள பாதுகாப்பு செலவு காட்டுகிறது.

புதிய ஆயுதங்களை அரசு அறிமுகப் படுத்திவருவதுடன், படையினரின் ஆயு தங்களையும் நவீனமயப்படுத்தி வருகின் றது. மேலும் முப்படைத் தளபதிகளுக்கும் அதிக சுதந்திரங்களையும் வழங்கியுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


HOT IN OUR STALL
Laser Pointer | Laptop Scanner
HDD Cooler Systems | 3 in 1 HeadPhone
Stearing Wheel | Joystick F16
Mouse Pen | Internet Phone
Norton Antivirus Original Pack
ALL IN ONE PRINTERS
(Printer, Scanner, Photocopy & Fax)
Brand New Intel Systems with Monitor
Complete Intel 3.0 Multimedia System for just 44,900/- only
Complete Intel Dual Core 3.0 System for just 54,900/- only
Complete Intel Core 2 Duo System for just 61,900/- only
Purchase one and get another one FREE
In Our EXHIBITION Stall
At Manipay Ladies College
UNIT
மனோகரா தியேட்டர் சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720, 0773134737


## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் ஐ.நாவுக்குப் போதுமான அழுத்தத்தைக் கொடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்துவருவதாக கூட்டமைப்பு வட்டாரம் தெரிவிக்கின்றது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதன் காரணமாகவே கண்காணிப்பகத்தை அமைக்க இலங்கை அரசு பின்னடிக்கின்றது என்றும், அரசின் இந்தப் பின்னடிப்பே மனித உரிமை மீறல்களை உறுதிப்படுத்துகின்றது என்றும் கூட்டமைப்பு தெரிவித்துள் ளது.

இலங்கையில் வடக்கு - கிழக்கு மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக நாடாளுமன்றில் சுட்டிக்காட்டிய வண்ணமே உள்ளது.

### நாடாளுமன்றில் அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டது

சமீபத்தில் நாடாளுமன்றில் இடம்பெற்ற வடக்கு - கிழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் தமிழர்கள் மீது மனித உரிமை மீறல்கள் அதிகளவு மேற்கொள்ளப்படுகின்றமையைச் சுட்டிக்காட்டி இம்மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் இவற்றைக் கண்காணிக்க இலங்கையில் ஐ.நா வின் மனித உரிமைக் கண்காணிப்பகம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்றொரு கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

அத்தோடு நின்றுவிடாமல் மட்டக்களப்பு மீதான படை நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட தமிழர்களின் பெயர் விவரங்களை நாடாளுமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இப்பெயர்ப்பட்டியலின் பிரதிகளை இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் ஐ.நா. சபைக்கும் கூட்டமைப்பு அனுப்பி வைத்திருந்தது.

அப்போது இலங்கையில் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க கண்காணிப்பகம் ஒன்று அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூட்டமைப்பு ஐ.நாவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

### ஆர்பர் அம்மையாரின் கருத்து

இந்த நிலையில் கடந்தவாரம் இலங்கை வந்திருந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த இலங்கை அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லையென்று குற்றம் சுமத்தியதோடு இங்கு ஐ.நா. கண்காணிப்பகம் ஒன்று அமைக்கப்படுவதற்கான கட்டாய தேவை எழுந்திருப்பதாகவும் கூறினார்.

ஆனால், இலங்கை அரசு அவரது கூற்றை நிராகரித்து விட்டது. ஒருபோதும் கண்காணிப்பகம் ஒன்று இலங்கையில் அமைக்க இடமளிக்கப்படமாட்டாது என்றும் மனித உரிமை மீறல்கள் இலங்கையில் இடம்பெறவில்லை என்றும் அரசு கூறிவிட்டது.

இதனால் கடுப்பாகிப் போயுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்காணிப்பகத்தை அமைக்கும் வகையில் ஐ.நாவுக்கு போதிய அழுத்தங்களைக் கொடுக்க நட வடிக்கைகளை [illegible] கூட்டமைப்பு [illegible] தெரிவித்துள்ளது. (சி)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது பெரிதும் உதவியது. உதாரணமாக சமீபத்தில் யாழ்ப்பா ணத்தில் உணவுப் பற்றாக்குறை நிலை ஏற்பட்டபோது அதனைத் தவிர்ப்பதற்காக உணவுப் பொருள்களை எமக்கு அனுப்பி இருந்தது.

இந்தியாவைப் பின்பற்றி ஐ.நாவும் செயற்படவேண்டும் என்று கேட்கிறோம். இந்த நாட்டின் மனித உரிமை தொடர்பான விவகாரங்களில் பொலிஸ் அதிகாரி போல் செயற்படுவதில் இருந்து ஐக்கிய நாடுகள் விலகி நிற்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் - இப்படி அவர் ஆர்பர் அம்மையாரிடம் தெரிவித்துள்ளார். (அ-1)

## வடமராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் ரோந்து நடவடிக்கை அதிகரித்த போதிலும் தேடுதல் நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை நேற்றுக் காலை யாழ். நகரத்தை அண்டிய பகுதிகளில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுவதாக பரவிய தகவல்களை அடுத்து மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது; குழப்பமுற்றனர்.

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட வில்லை என்று காலை 7.30 மணியளவில் அறிவிக்கப்பட்ட பின்னரே நிலைமை வழ மைக்குத் திரும்பியது. (அ-1-155-218)


மீண்டும் விற்பனைக்கு வந்துள்ளது
HERO STREAM
49CC

மற்றும் Valvoline champ 4T Oil, RR பற்றரிகள், உதிரிப்பாகங்கள், அசிட் கான்கள், மோட்டார் சைக்கிள் செட்டைகள் என்பனவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
குறிப்பு:- மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் வங்கி கணக்கின் ஊடாகவும் பணத்தை செலுத்தலாம். செலுத்த விரும்புவர் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.
யசோ மோட்டார்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2544
(சி/53996)


## மரண அறிவித்தல்

### இரத்தினசிங்கம் பரமேஸ்வரி

(பருத்தித்துறை சிவசக்தி மோட்டார்ஸ் உரிமையாளரின் பாரியார்)

வெற்றிலைக்கேணி, முள்ளியானை பிறப்பிடமாகவும் பிரதான வீதி, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் பரமேஸ்வரி 13.10.2007 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் மற்றும் மனோன்மணி தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும், இரத்தினசிங்கத்தின்(உரிமையாளர், சிவசக்தி மோட்டார்ஸ், பருத்தித்துறை) மனைவியும், இதயகுமார்(உரிமையாளர், கருமாரி மோட்டார்ஸ், பருத்தித்துறை), சதீஸ் (B.Sc. Biotech 2nd year Student, Vinayaka mission's Research Foundation deemed University, India) ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலதியின் அன்பு மாமியாரும், வேணுஜனின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2007) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இரத்தினசிங்கம்
(கணவர்)

பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.